**சீனா அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செய்த்திட்டம் 3 இன் (கட்டம் I) - 2014**

---

அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செய்த்திட்டம் 3 இன் (கட்டம் I) 2014 செப்தெம்பர் 09 முதல் 2014 திசெம்பர் 31 வரையாக முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கும் சீனா அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2014 மார்ச் 11 ஆந் திகதிய 45102014010000245 ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2. செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. நாடு முழுவதும் பரவியிருந்த முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட வீதிப் பிரிவுகளின் புனரமைப்பு ஊடாக நாட்டின் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பின் நடமாட்டத்ததை அதிகரிப்பதும் அதன் மூலம் முக்கியமான சேவைகளிற்கு நுழைவு வசதியளித்தலும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு பங்களிப்பு செய்வதுமே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் வசதி உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 46,184.54 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 357.68 மில்லியனானதுடன் அதில் ரூபா 38,736 மில்லினிற்கு சமமான ஐ.அ.டொலர் 300 மில்லியன் சீனா அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 செப்தெம்பர் 09 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2017 யூலை 17 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

---

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியிணர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் வசதி உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக் கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் வசதி உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் வசதி உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

07 வீதிகளின் புனரமைப்புக்கள் மீதான ஒப்பந்தங்களிற்காக 2015 இல் செலுத்த வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்த தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் மீளாய்வாண்டு காலப்பகுதியின் இறுதியில் செலுத்தவேண்டியவையாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டதன் விளைவால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 11,172 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்களின் பெறுமதி ரூபா 3,319 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 5.4.4 ஆம் பிரிவுக்கு முரணாக ஏற்பாட்டு தொகைகள் மற்றும் நிகழத்தக்கவைகள் போன்றவற்றிற்காக செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் ஒப்பந்தக் கிரயத்தின் ஒரு பகுதியாக கருதப்பட்டிருந்ததுடன் 30 சதவீதமான தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் இதன்படி கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதன்விளைவால், மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட 07 ஒப்பந்தங்களின் மீது ரூபா 1,655.27 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டின் போதான நிதியளிப்பு மற்றும் பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| சீனா அபிவிருத்தி வங்கி | 300.00 | 38,736.00 | 2,858.80 | 21.93 | 2,858.75 |
| இலங்கை அரசாங்கம் | 57.68 | 7,448.54 | 1,100.00 | 4.54 | 591.53 |
| மொத்தம் | 357.68 | 46,184.54 | 3,958.80 | 26.47 | 3,450.28 |

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட 248.19 கிலோமீற்றர் நீளமான 13 வீதிகளில் 219.94 கிலோமீற்றர் நீளமான 11 வீதிகளின் புனரமைப்பு வேலைகளிற்கான ஒப்பந்தம் மீளாய்வாண்டு காலத்தின் போது வழங்கப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

----------------------------

செயற்திட்டமானது, வீதிவழியின் 10,412 கனமீற்றர் நீளமான மேலதிக அகழ்வு மற்றும் அளவீட்டுத் தாள்களில் செய்யப்பட்ட கணிப்பீட்டுத் தவறுகள் என்பன காரணமாக இரத்தினபுரி – பலவெல- கரவித்த வீதியில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புகளின் மீது மேலதிகமாக ரூபா 16.11 மில்லியன் தொகையை செலவழித்திருந்தது.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2014 செப்தெம்பர் 09 இல் தொடங்கப்பட்டிருந்த போதிலும் 2015 மார்ச் 20 இலேயே செயற்திட்டத்தின் பதவியணிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 106 நபர்களை ஈடுபடுத்தியிருந்தது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் செயற்திட்டத்தின் 260 பதவியணி பதவிகளிற்கான நபர்களை சேர்ப்பதற்கு 2015 யூலை 20 இல் பெற்றிருந்தது.

(ஆ) முன்னுரிமை வீதி செயற்திட்டம் 2 இன் கீழ் புனரமைக்கப்பட்ட பதுளை-மஹியங்கனை வீதியின் திறப்பு விழாவின் மீது ரூபா 2.14 மில்லியன் தொகையான விளம்பரக் கட்டணங்கள் இந்த செயற்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட காலி - உடுகம வீதியின் கிரயமாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.